அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :116/2017

தேதி : 20/10/2017

**அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டடம் இடிந்து விழுந்து 8 பேர் பலி**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் இரங்கல்.**

நாகை மாவட்டம் தரங்கம்பாடி அருகில் பொறையார் என்ற இடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டடம் இடிந்து விழுந்து 8 பேர் பலியான சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

சமீபத்தில் கோவை சோமனூர் பேருந்து நிலையக் கட்டடம் இடிந்து சிலர் பலியானதைத் தொடர்ந்து நடந்த இச்சம்பவம், அரசுப் பேருந்து கழகம் சார்ந்த கட்டடங்களின் அவல நிலைகளையும், அவற்றை அவ்வப்போது சரியாக பழுதுபார்த்து பராமரிக்காத நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன.

அடுத்த மழைக்காலம் தொடரவிருக்கும் நிலையில், முன்கூட்டியே பழைமையான கட்டடங்களை இடித்து புதிதாகக் கட்டவும், பிற கட்டடங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு பழுது நீக்கிடவும் தக்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற துயர நிகழ்வுகள் மீண்டும் தொடராமல் இருப்பதை அரசு உறுதிசெய்யவேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

கட்டிடம் இடிந்ததில் சிக்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில், ஆழ்ந்த இரங்கலையும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனையும் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com